உ
சிவமயம்



அமரர்

# ஆறுமுகம் தெய்வானைப்பிள்ளை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## 31ஆம் நாள் நினைவு மலர்

2017.01.17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



விடத்தற்பளை கெற்பேலியைப் பிறப்பிடமாகவும்,
இல:278,2ஆம்பாடசாலை அருகாமை, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# ஆறுமுகம் தெய்வானைப்பிள்ளை

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## 31ஆம் நாள் நினைவு மலர்

2017.01.17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

எங்கள் குடும்பப் பெருவிருட்சத்தின்
ஆணிவேராக இருந்து, எம்மவரின்
உயர்வுக்குத் தன்னைத் தியாகம் செய்து
அணையாத விழவிளக்காய் நாம் அறிந்த நாள்
முதலாய் அன்போடு அரவணைத்து அமைதியின்
சிகரமாய் நின்று எம்மை வாழ் வாங்கு வாழ வைத்து;
அன்பைப் பண்பை அறிவைப் போதித்த அன்னையே!
உங்கள் பார்வையில் எவரொருவரும்
பிள்ளைகளே இவ்வாறு உயரிய
பண்பு கொண்ட எங்கள் குலதெய்வத்திற்கு
இம் மலரினைக் காணிக்கையாக்குகின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

மலர்வு
1932
.
06
.
03



உதிர்வு
2016
.
12
.
18


அமரர்

# ஆறுமுகம் தெய்வானை

விதி வகுத்தான் வினையினையிறுத்த வாழ்வும் - எது நீதியென உணராபோக்கும்
தேற்றுவார் யாருமிலர் என்று விதி வகுத்த வழி நொந்தோம்
நேற்றுவரை நீங்கள் இருந்து தேற்றும் வரை நாமறியோம் இவ்வுலகில் தீதொன்றும்
ஆற்றாத்துயர் கொண்டு ஆற்றுங்கண் நீங்கள் இன்றி தவிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்வு
1925 . 04 . 22

உதிர்வு
1994 . 05 . 23

அமரர்

# சின்னத்தம்பி ஆறுமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை துதிப்பாக்கள்



## விநாயகர் துதி

பிடியதனுருவுமை கொள மிகு கரியது
வடி கொடு தனதடி வழிபடும் அவரிடம்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில் வலி வலமுறை இறையே

# பஞ்ச தோத்திரம்

## தேவாரம்

**திருச்சிற்றம்பலம்**

அங்கமும் தேவமும் ஓது நாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மாங்குல் மதித்த வழ் மாடவீதி
மருகல் நிலாவியமைந்த சொல்லாய்
சேங்கயலார் புனற் செல்வ மல்கு
சீர் கொள் செங்காட்டங் குடியதனுள்
கங்கு விளங்கெதி யேந்தியாடுங்
கணபதியீச்சரங் காமுறவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனே உனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கழுந் தருளுவ தினியே

# திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக்கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திரு வீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்
புண்டேல் உண்மையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
இறைவா ! நீ ஆடம் போதுன் அடியின்
கீழ் இருக்க என்றார்

## திருப்புகழ்

உம்பர் தரு தேருமணி கசிவாகி
ஒன்கடலுள் தேன் அமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகப் பலகாலும்
என்றன் உயிர்க்கு ஆதரவுற்றருள் வாயே
தம்பிதனக் காகவனத் தணை வோனே
தந்தை வலத் தாலருள்கை கனியோனே
அன்பர் தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானைமுகப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் ஆறுமுகம் தெய்வானைப்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு

வான் பயிரொடு வளம் கொழிக்கும் நெல் வயலும், கடல் வளமும் நிறைந்து விளங்கும் யாழ் நகரில் விடத்தற்பளை கெற்பேலி எனும் கிராமத்தில் சைவம் நிறைந்து விளங்கும் இவ்வூரிலே வேளாண்குலத் தோன்றலாம் ஐயம்பிள்ளை கண்ணாத்தை தம்பதியினரின் கடைசிப் புதல்வியாய் 1932ஆம் ஆண்டு ஆனி மாதம் மூன்றாம் நாள் அமரர் தெய்வானைப்பிள்ளை உதித்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை கச்சாயில் பயின்றார். சிறுவயதிலேயே இறை பக்தி உடையவராகவும், இரக்க முடையவராகவும், பண்பின் திலகமாகவும் வாழ்ந்து வந்தார். இருந்தும் வீட்டு வறுமை காரணமாக கல்வியை மென்மேலும் தொடர முடியவில்லை.

இவ்வாறு வாழ்ந்து வருகையில் இவர் மணம் முடிக்கும் வயதினை அடையவும் எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகக் கொண்ட தனது சொந்த பெற்றோர்களான சின்னத்தம்பி பொன்னாச்சி தம்பதிகளின் மூன்றாவது புதல்வன் ஆறுமுகம் அவர்களை திருக்கரம் பற்றி இல்லறம் எனும் நல்லற வாழ்க்கையில் சேர்த்து வைத்தனர் அக்காலத்தில் மக்கள் பேறாக அமரர் மகாலிங்கம், நாகேஸ்வரி, தங்கேஸ்வரி, மகேஸ்வரி , யோகலிங்கம், புவனேஸ்வரி(அன்னம்), அமரர் யோகேஸ்வரி, அமரர் சிவயோகலிங்கம், பஞ்சலிங்கம் என்னும் ஒன்பது பிள்ளைகளையும் இருவரும் சேர்ந்தே அன்புடனும், பாசத்துடனும் அறிவூட்டி வளர்த்து வந்தார்கள். வீட்டின் வறுமை காரணமாக பிள்ளைகளைப் பெரியளவில் கல்வியில் பெருமை சேர்க்க வளர்க்க முடியவில்லை இருந்தும் இவரது அயராத உழைப்பால் அவர்களின் விருட்சத்திற்கு பெருமை சேர்க்க பிள்ளைச் செல்வங்களிற்கு அறிவை, உழைப்பை, அன்பை, பண்பை ஊட்டி வளர்த்தார்கள்.

அவ்வாறே தனது சுய முயற்சி காரணமாக வேளாண்மை செய்தே தனது வறுமையில் இருந்து மெல்ல விடு படவே நாகேஸ்வரி, தங்கேஸ்வரி, மகேஸ்வரி, யோகலிங்கம், யோகேஸ்வரி, சிவயோகலிங்கம், ஆகிய பிள்ளைச் செல்வங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையே பாலசுப்பிரமணியம் , நடராசா, தர்மலிங்கம், இந்திராணி, பாலசுப்பிரமணியம், பாரதி ஆகிய மருமக்களிற்கு இல்லறம் எனும் நல்லற வாழ்க்கையிலே இணைத்து வைத்து வாழ்ந்து வந்தார். அவர்களின் தவப்பயனாகப் பேரப்பிள்ளைகளையும் கண்டு இன்புற்று வாழ்ந்து வருகையிலே 1992ஆம் ஆண்டு தனது கணவர் அமரர் ஆறுமுகம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு அவரது குடும்பமே கதிகலங்கி நின்றது.

பின்பு தனது கடைசி மகனை லதாவிற்கு மணம் முடித்து வைத்தார். அவர்களது தவப்பயனால் பேரப்பிள்ளைகளையும் கண்டு இன்புற்று வாழ்ந்து வருகையிலே நாட்டுப் பிரச்சினை காரணமாக ஸ்கந்தபுரம் இடம்பெயர்ந்து வந்து குடியேறி தனது மகள் அன்னத்துடன் வாழ்ந்து வந்தார்.

எவரொருவர்க்கும் தீங்கு நினைக்காத இவர் 36 பேரப்பிள்ளைகளையும் 49 பூட்டப்பிள்ளைகளையும் கண்டு அழியாச் செல்வமாக அவர்களிற்கு கல்வி புகட்டும் அளவிற்கு வாழ்வாங்கு வாழ வழி சமர்த்துக் கொடுத்து இன்பமுடன் வாழ்ந்து வந்தார். விதியும் வேளையும் கூடி வரவும் மண்ணில் பிறந்தோர் மரணிப்பதில் மாற்றுக் கருத்து இல்லை என்பதற்கிணங்க நிலையில்லாத வாழ்வில் நிலையானது மரணமே என்பதை மெய்யாக்க காலனும் கவர்ந்தான் தெய்வானைப்பிள்ளையை.

2016.12.18 ஞாயிற்றுக்கிழமையன்று அமரர் ஆகினார். தெய்வானைப்பிள்ளை அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் புலம்பல்

பத்து மாதம் சுமந்த அன்னையே!
பிள்ளைகள் எம்மைப் பரிதவிக்கவிட்டு
பாராது துயில் கொள்வதேனோ?
அம்மா என்று அழைத்ததும் இராப்பகல் பாராது
எம்மை அள்ளி அணைப்பீரே
நிர்க்கதியாய் எம்மை தவிக்கவிட்டு
நீர் துயில் கொள்வதேனோ?
ஊட்டி ஊட்டி வளர்த்த தாயே
உங்கள் திருமுகம் காண்பது எப்போ?

# மருமக்கள் புலம்பல்

மடி மீது சுமந்த பிள்ளைகளை
மகிழ்வுடன் எமக்களித்து
வாழ்விலே குறைவின்றி
வாழ வழி காட்டிய மாமியே
காலமெல்லாம் எம்மோடு
சேர்ந்திருப்பீர் என நினைத்தோம் - திடீர்
உங்கள் பிரிவுச் செய்தி கேட்டு எங்கள்
வாழ்விற்கு ஒரு விழுக்காடே
ஆசை மாமியே எப்போ காண்போம் உம்மை?

# பேரப்பிள்ளைகள் புலம்பல்

அன்னை போலே சோறு ஊட்டி
அள்ளி அணைத்து முத்தமிட்டு
மழலைக் கதை கூறி
சீராட்டி பாராட்டி சீராக வளர்த்த
அம்மம்மா, அப்பம்மா
உங்கள் அன்பைப் பண்பை நித்தமும் எதிர்பார்த்து
காத்திருக்கின்றோம் தினமும்
பாதியிலே எங்களை விட்டு நீள் தூரம் சென்றதேனோ
எப்போது அரவணைப்பீர் எம்மை அம்மம்மா, அப்பம்மா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூட்டப்பிள்ளைகள் புலம்பல்

அன்புப்பூட்டியே அணையா குல விளக்கே
ஆல விருட்சமாய் எம்மை உருவாக்கி விட்டு
ஆண்டவன் திருப்பாதம் சென்றீரோ
ஞாலத்தில் உத்தமராய் வாழ்ந்து
நாங்கள் செய்யும் சிறு குறும்புகளை
அன்பாலே கண்டித்து மகிழ்பவரே
ஆறாது ஆறாது என்றும் உங்கள் நினைவுத் துயரம்
எப்போ வருவீர்கள் எங்கள் அன்புப் பூட்டியே?

# பெறாமக்கள் புலம்பல்

பெற்றால்தான் பிள்ளையா?
பெறாத நாமும் உங்கள் பிள்ளைகளே
பேரன்பு கொண்ட அன்புத்தாயே
பெருமனம் கொண்ட அன்னையே
உங்கள் பிள்ளைகள் போலே
எங்களையும் அரவணைத்தீரே
அன்புத்தாயே அல்லலுறுகிறோம் உம் முகம் காண
இனி எப்போது பார்ப்போம் உங்கள் திருமுகம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்



## நேரிசை வெண்பா

### காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்கும் செல்வம் பலித்துக் – கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலனருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவும் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி ஆட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்க என்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயுதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரெண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளறரொலி யையும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈர்ஆறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர்ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரெண்டு ஆயுதம் பாசங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரெண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளறரொலி யையும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனிஒளி ஒவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறுஇடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈர்ஆறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பு அழகுடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடர்ஒளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி அதனில் சிலம்பொலி முழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
எந்தனை ஆளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோதன் என்று
உன் திருவடியை உறுதி என்று எண்ணும்
என்தலைவைத்து உன் இணையடி காக்க
என் உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளம் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேர் இள முலைமார் திருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்கக் காக்கக் கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்லபூதம் வாலாஷ் டிகப்பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங்காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டியச் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூதாள்எனைக் கண்டாள் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டு முட்டு விழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணல்எரி தணல்எரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டு அதுவோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புமசுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரதி
பக்கப்பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் எந்தனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்க உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாக
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொழி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தா குகனே கதிர் வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துஉறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ் சண்முகத் தரசே
காரர் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினே னாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரட்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென வறுமைக ள்நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென்றன்பாய்ப் பிரிய மளித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தனென் மீதுன் மனமகிழ்ந்து தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட ன்நாளும்
ஆசார த்துடன் அங்கம் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாற் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வசத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் - சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவை துணித்தகை யதனால்
இருபத்தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிக் காப்பு



தேவிதுணை

ஓம் சக்தி

**வீநாயகர் துதி**

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றமும் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற்கா.

**வேண்டுதல் கூற்று**

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்பாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமங்கள் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லலோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டு விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிவிடு
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியாரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விளைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்விசிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீர சக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத்திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னை காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவிடும் நல்வாழ்வு மிகுந்துவரு
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்.
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வு முண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாய் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கி வர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்சிந்தனைகள்

- யாரேனும் குறை கூறினால் அது உண்மையாக இருந்தால் உன்னைத் திருத்திக்கொள்.
- சத்தியமே வெற்றி தரும். சத்தியத்தை ஏணியாக உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள்.
- உண்மை சொல்லப் பழகிக் கொள்ளுங்கள். உறுதியை நெஞ்சில் தேத்திக் கொள்ளுங்கள்.திறமைகள் தான் அறிவு என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.
- பிணி வருவதற்கு முன், மூப்பு உண்டாவதற்கு முன் ,புத்தி மயங்கி மறைவதற்கு முன், சாவு நெருங்குவதற்கு முன் உடல் நலத்துடன் இருக்கும் போதே செய்ய வேண்டிய நல்ல காரியங்களைச் செய்யுங்கள்.
- மனிதனின் முக்கிய தேவை நம்பிக்கையும் பொறுமையும் ஆகும்.
- நல்லவற்றை பாறையில் எழுது. தீயவற்றை பனிக்கட்டியில் எழுது.
- வாழ்க்கை என்பது சந்திரன் போன்றது. ஒரு வேளை வெளிச்சமாகவும் மறு வேளை இருட்டாகவும் இருக்கும்.
- மற்றவர்களை இகழும் போது நீயும் தாழ்வடைகின்றாய் என்பதை உணர்ந்துகொள்.

## மனிதன் மனிதனாய் வாழ

- நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.(Ego)
- அர்த்தமில்லாமலும், தேவையில்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேசிக்கொண்டிருப்பதை விடுங்கள். (Loose Talks)
- எந்த விசயத்தையும், பிரச்சினைகளையும் நாசுக்காக கையாளுங்கள் (Diplomacy) விட்டு கொடுங்கள் (Compromise)
- நீங்கள் சொன்னதே சரி செய்வதே சரி என்று கடைசி வரை வாதாடாதீர்கள். (Adamant Argument)
- குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள். (Narrow Mildness)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உண்மை எது பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்பதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்பதையும் இங்கே சொல்வதையும் விடுங்கள். (Carry Tales)
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள். (Superiority Complex)
- அளவிற்கதிகமாக தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள். (Over Expectation)
- எல்லோரிடத்திலும் எல்லா விசயங்களையும் அவர்களுக்க சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- கேள்விப்படுகின்ற எல்லா விசயங்களையும் நம்பி விடாதீர்கள். அற்ப விசயங்களை பெரிதுபடுத்தாதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாக இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். (Flexibility)
- மற்றவர் கருத்துக்களை செயல்களை நடக்கிற நிகழ்ச்சிகளை தவறாக புரிந்து கொள்ளாதீர்கள். (Misunderstandings)
- புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பேச்சிலும் நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும் தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
- மற்றவர்களுக்கு உரிய மரியாதையைக் காட்டவும் இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
- பிரச்சினைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.
- வாழ்நாள் குறுகியது எனவே மற்றவர்களுடன் மகிழ்ச்சியாக வாழக் கற்றுக் கொள்ளுங்கள்.
- உன்னால் முடிந்ததை திறமையாகச் செய். பின்னால் வரும் விமர்சன மழை உன்னைத் தாக்காமல் பார்த்துக் கொள்.
- எப்போதும் எல்லோரிடத்திலும் அன்பு காட்டுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரு"மை" க்குத் தேவையானது

- உயிர்போக நேர்ந்தாலும் நீ பேச வேண்டியது - **உண்மை**
- மற்றவர்களுடன் பேசும் போது உன்னில் கலந்திருக்க வேண்டியது - **இனிமை**
- வெற்றி பெற நீ என்றும் ஒழுக வேண்டியது - **ஒற்றுமை**
- கனவிலும் நனவிலும் நீ செய்ய வேண்டியது - **நன்மை**
- உறுதியான வாழ்விற்கு என்றும் உன்னிடம் இருக்க வேண்டியது - **எளிமை**
- இறுதி மூச்சு உள்ளவரை நீ மீறாது இருக்க வேண்டிது - **கடமை**
- வெற்றிகளும் உயர்ச்சிக்கும் உன்னிடம் இருக்க வேண்டியது - **வல்லமை**
- உன்னையே நீ சிந்தித்தறிய அடிக்கடி பெற வேண்டியது - **தனிமை**
- காலமெல்லாம் சிறப்புடன் வாழ நீ அணிய வேண்டியது - **பொறுமை**
- இவ்வாறு நீ ஒழுங்காகி விட்டால் நாளை நீ பெறுவது - **பெருமை**

## தெரிந்து கொள்ளுங்கள்

- நல்ல நாள் - இன்று
- நல்ல வெகுமதி - மன்னிப்பு
- அறியக் கூடாதது - அடுத்தவன் செயலை
- இருக்க வேண்டியது - மானம்
- இருக்கக் கூடாதது - ஆணவம்
- தேவைக் கேற்றது - சாமர்த்தியம்
- எதிலும் சுலபமானது - குற்றங்காணல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எதிலும் கடினமானது - பிழையின்றி வாழ்தல்
- மேல் தரமானது - நட்பு
- கீழ்த் தரமானது - துரோகம்
- செய்ய வேண்டியது - உதவி
- செய்ய கூடாதது - உபத்திரம்
- அறிய வேண்டியது - உலகச் செயலை
- அடங்க நினைப்பது - தாய், தந்தைக்கு
- அடக்க நினைப்பது - உனது மனதை
- நம்பக் கூடியது - மனச்சாட்சியை
- நம்பக் கூடாதது - வதந்தியை
- ஆணுக்குத் தேவையானது - உழைப்பு
- ஆணுக்குத் தேவையற்றது - அலங்காரம்
- பெண்ணுக்குத் தேவையானது - அடக்கம்
- பெண்ணுக்குத் தேவையற்றது - தனிமை
- வாழத் தேவையானது - நம்பிக்கை
- வாழத் தேவையற்றது - சந்தேகம்
- தடுக்கக் கூடியது - கோபம்
- இழக்கக் கூடியது - பகை
- இழக்க முடியாதது - காதல்
- மனித உணர்வு - பரிவு
- பகுத்தறிவான உணர்வு - இரக்கம்
- புனிதமான உணர்வு - அன்பு
- இரக்கமான அன்பு - பாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

- மற்றவர்கள் முடியாது என்று நினைக்கின்ற ஒரு விடயத்தை முடித்துக்காட்டுவது தான் நல்ல தலைமைப் பண்பின் அடையாளம்.

- முழுமையான நிதானத்துடன் இருக்கும் ஒருவரை முட்டாளாக்க முடியாது

- அழிவை நோக்கிச் செல்பவன் பிறருடைய அறிவுரைகளுக்கு செவி சாய்க்க மாட்டான்

- அளவுக்கு அதிகமான பணிவை ஒரு போதும் நம்பக்கூடாது

- அறிவுரை என்பது விளக்கெண்ணெய் போல கொடுப்பது சுலபம் ஏற்றுக்கொள்வது கடினம்

- இரண்டு பொருட்களை இழந்த பிறகுதான் அதன் மதிப்பை உணர்கின்றோம். ஒன்று ஆரோக்கியம் மற்றையது இளமை

- அனுபவம் என்பது ஒரு புதுவிதமான ஆசிரியர். அது பாடங்களை கற்றறிந்த பின் தேர்வுகளை வைப்பதில்லை. தேர்வின் மூலம் தான் பாடங்களைக் கற்றுத் தருகிறது.

- குழந்தைகள் ஈரமான சீமெண்ட் மாதிரி அவர்கள் மனதில் எது விழுகிறதோ அது ஆழப்பதிந்து விடும்.

- ஒரு குழந்தைக்கு கற்றுக் கொடுக்க முடியும் என்றா நீ நினைக்கிறாய். அது தானாகவே கற்றுக் கொள்ளும். வாய்ப்புக்களை உண்டாக்கித் தருவது இடர்பாடுகளை நீக்குவது தான் உன் கடமை.

- சிந்திக்காமல் படிப்பது ஜீரணமாகாமல் உண்பதற்குச் சமன்.

- நாளைக்காக சேகரித்து வைப்பவன் கடவுளிடம் நம்பிக்கை இல்லாதவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்வி வேர் கசக்கும் ஆனால் அதன் விளைச்சல் இனிக்கும்.

- பயம் கதவைத் தட்டுகிறாதா நம்பிக்கையை எழுந்து போய் கதவைத் திறக்க சொல்லுங்கள். வெளியே ஒருவரும் இருக்க மாட்டார்கள்.

- மனிதன் தான் செய்யும் தவறுகளுக்குச் சிறந்த வக்கீலாகவும் மற்றையவர் செய்யும் தவறுகளுக்கு நீதிபதியாகவும் இருக்கிறான்.

- முட்டாள்களிடம் உள்ள பிழைகள் அவனுக்குத் தெரிவதில்லை. ஆனால் உலகுக்குத் தெரியும். அறிவாளியிடம் உள்ள பிழைகள் அவனுக்குத் தெரியும். ஆனால் உலகுக்குத் தெரியவில்லை.

## பொன்மொழிகள்

- வார்த்தைகள் பூப் போன்றவை அவற்றைத் தொகுக்கும் விதத்தில் தொகுத்தால் மதிப்பைப் பெறமுடியும்.

- பணத்தைக் கொண்டு நாயை வாங்கி விடலாம். ஆனால் அன்பைக் கொண்டு தான் அதன் வாலை அசைக்க முடியும்.

- மனிதன் பிறந்தது வெற்றி அடையவே. தோல்விக்கான காரணங்களை சொல்லிக்கொண்டிருக்க அல்ல.

- நன்மை என்றும் தீமை என்றும் எதுவுமில்லை. அவ்விதம் ஆகிவிடுவது அவரவர் மனமே.

- வீரன் ஒரு முறைதான் சாகிறான். கோழை ஒவ்வொரு நிமிடமும் செத்துக் கொண்டிருக்கின்றான்.

- முடியாது என்ற வார்த்தைகள் முட்டாளின் அகராதியில் மட்டுமே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுவது எல்லாம் எழுவதற்குத் தானே தவிர அழுவதற்கல்ல.

பலமான மழை பெய்யும் போது லேசான மழை வேண்டுமென்று இறைவனை வேண்டாதே. உறுதியான குடை வேண்டுமென்று வேண்டும்.

வெறும் கைகள் என்பது மூடத்தனம். 10 விரல்கள் என்பது மூலம் தனம்.

யாராக இருக்க விரும்புகிறோம் என்பதை விட யாருக்காக இருக்க விரும்புகிறோம் என்பது தான் முக்கியம்.

மனிதனின் குற்றங்களில் பெரும்பாலானவை அவனது நாவிலிருந்துதான் பிறக்கின்றன. - நபிகள் நாயகம்.

தன்னை அதிக பத்திசாலியாக எண்ணுவதே மனிதனிடமுள்ள மிகப் பெரிய பலவீனம். - சிம்மன்ஸ்.

உண்மையான செல்வாக்கை நாம் தேடிக்கொள்ளக் கூடாது அது நம்மைத் தொடர்ந்து வரவேண்டும். - மான்ஸ் பீல்டு.

நம்முடன் வாழ்வோரைப் புரிந்துகொள்வதற்கு நம்மை நாமே முதற்கண் புரிந்து கொள்வது அவசியம். - அன்னை தெரேசா.

எவன் பிறர் நற்செயல்களைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ள வில்லையோ. அவனால் நல்ல செயல்கள் எதையும் செய்ய முடியாது. - ஜேம்ஸ் ஆலன்.

மகிழ்ச்சி என்ற உணர்ச்சி இல்லாவிட்டால் வாழ்க்கை சுமக்கமுடியாத பெரிய சுமையாகிவிடும். - பெர்னார்ட்ஷா.

மின்மினிப்பூச்சி எவ்வளவு ஒளியுடன் திகழ்ந்தாலும் அது தீ ஆகாது - சாணக்கியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நம்பிக்கை குறையும்போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிள்கிறாம். - ஜான்மில்டன்.

- உண்மையான நட்பு ஆரோக்கியம் போன்றது. அதனை இழக்கும் வரை அதன் மதிப்பை நாம் உணர்வதில்லை. - வோல்டன்.

- அவசரமாகத் தவறு செய்வதை விட தாமதமாக சரிவர செய்வது மேல். - ஜெபர்சன்

- படித்தவனிடம் பக்குவம் பேசாதே. பசித்தவனிடம் தத்துவம் பேசாதே

- மகான் போல நீ வாழ வேண்டும் என்பதில்லை. மனசாட்சிப்படி வாழ்ந்தால் போதும்.

- பகைவரையும் நண்பனாகக் கருது. பண்பாளன் தான் உலகை வயப்படுத்த முடியும்.

- ஆகாயக் கோட்டை கட்டுவது தவறில்லை. அத்திவாரம் மட்டும் தரையில் இருக்க வேண்டும்.

- சுமை அதிகமாக இருக்கின்றது என்று தான் அழவில்லை. ஆண்டவனே முதுகை அகலமாக்கித்தா என்று தான் வேண்டுகின்றேன்.

- நேசிப்பவர்கள் எல்லாம் நம்மோடு நிலைத்து விட்டால் நினைவின் மொழியும் பிரிவின் வலியும்தெரியாமல் போய் விடும்.

- நீ பேசும் வார்த்தைகள் எல்லோருககும் புரியும் ஆனால் நீ பேசாத மௌனம் உன்னை நேசிப்பவர்களுக்கு மட்டுமே புரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

01. இலங்கையின் தேசிய மரம் எது?

நாக மரம்

02. இலங்கையின் தேசிய பறவை எது?

காட்டுக்கோழி

03. இலங்கையின் தேசிய மலர் எது?

அல்லி

04. இலங்கையின் முதல் ஜனாதிபதி யார்?

சேர். வில்லியம் கொபல்லாவ

05. இலங்கையின் வரைபடத்தை வரைந்தவர் யார்?

குளோடியஸ் தொலமி

06. இலங்கையின் மிகப் பெரிய ஆறு எது?

மகாவலி கங்கை

07. இலங்கையின் மிகப் பெரிய மலை எது?

பேதுருதாலகால மலை

08. இலங்கையின் பௌத்த கொடியை உருவாக்கியவர் யார்?

திரு. கேணல் ஒல்கொட்

09. இலங்கையின் சித்திர சிற்பக் கலை ஆராய்ச்சியாளர் யார்?

டாக்டர் ஆனந்த குமாரசுவாமி

10. இலங்கைக்கு புனித வெள்ளரச மரக் கிளையைக் கொண்டு வந்தவர் யார்?

பிக்குனி சங்கமித்தை

11. இலங்கையில் சுவர் ஓவியங்கள் காணப்படும் இடங்கள் எவை?

பொலன்னறுவை, கண்டி, மகியங்கனை, களனி

12. இலங்கையில் குகை ஓவியங்கள் காணப்படும் இடங்கள் எவை?

சிகீரியா, தம்புள்ள, களனிவிகாரை, ஹிந்தலாகாவ, திம்புலாகல

13. பராக்கிரமபாகு சிலை எங்குள்ளது?

பொலனறுவையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. மரத்தளபாடத்திற்கு புகழ் பெற்ற இடம் எது?

மொரட்டுவ

15. பாய் இழைத்தல், தும்பு வேலைக்கு சிறந்த இடம் எது?

காலி, தும்பறை

16. முகமூடி அலங்காரம் செய்வதில் சிறந்த இடம் எது?

அம்பலாங்கொடை

17. வெள்ளி வேலைக்கு பிரசித்தி பெற்ற இடம் எது?

கண்டி, யாழ்ப்பாணம்

18. பூமியின் ஈர்ப்பு விசையைக் கண்டறிந்தவர் யார்?

சேர்.ஐசாக் நியூற்றன்

19. விபுலானந்தர் இயற்றிய சிறந்த நூல் எது?

யாழ்நூல்

20. எல்லா மதத்தவர்களும் போற்றி வழிபடும் மலை எது?

சிவனொளிபாதமலை

24. இலங்கையின் இயற்கைத் துறைமுகம் எது?

திருகோணமலைத் துறைமுகம்

25. இலங்கையின் தேசாதிபதியாக இருந்த முதல் இலங்கையர் யார்?

சேர்.ஒலிவர் குணதிலக

26. இலங்கையில் இலவசக் கல்வி அறிமுகப்படுத்திய ஆண்டு?

1945ல்

27. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடம் எது?

சபுஸ்கந்த

28. தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?

தலவாக்கலை

29. இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?

அகலவத்தை

30. காகித தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது?

வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியமான வாழ்விற்கு சில ஆலோசனைகள்

- எப்போதும் குடிநீருக்கு கொதித்து ஆறிய நீரை மட்டுமே பாவியுங்கள். இதனால் நீரிலுள்ள கிருமிகளை அழிப்பதுடன் எமது நாட்டின் சில பகுதிகளில் நீரில் அதிகமாகக் காணப்படும் கல்சியத்தையும் படியச் செய்யலாம்.

- குடிநீருக்கு நீங்கள் பாவிக்கும் கிணற்றுக்கு கிரமமாக குளோரின் போடுங்கள். வேண்டிய குளோரின் அளவு போடும் முறை என்பன பற்றி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் பொது சுகாதார பரிசோதகர்களிடம் ஆலோசனை பெறலாம்.

- சாப்பிட முன்பும், சமைக்க முன்பும், மலம் கழித்த பின்னும் நன்றாக சவர்க்காரமிட்டு கை கழுவுங்கள்.

- தினமும் நன்றாக குளித்து உடல் சுத்தத்தை பேணுங்கள், தலைமுடி, நகங்களை எப்போதும் அளவாக வெட்டி வைத்திருங்கள்.

- மலம் கழிக்க மலசலகூடங்களை மட்டுமே பாவியுங்கள். சிறுவர்களின் மலங்களை கண்டபடி வீசாது மலசல கூடத்தில் போடவும் அல்லது புதைக்கவும்.

- கடைகளிலும், வீதியோரங்களிலும் சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப்பட்டு விற்கப்படும் தின்பண்டங்களை இயன்றளவு தவிர்க்கவும்.

- உணவை நன்றாக வேகவைத்து சமைக்கவும். சமைத்த உணவை ஈக்கள் மொய்க்காது மூடி வகைக்கவும்.

- பச்சையாக உட்கொள்ளும் பழங்கள், மரக்கறிகளை நன்றாக கழுவியே சாப்பிடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமையலுக்கு அயடின் கலந்த உப்பை மட்டுமே பாவியுங்கள். அயடின் குறைபாட்டைத் தடுக்க இது உதவும். கடல் உணவுகளும் இதைத் தடுக்கவல்லன.

- உங்கள் உணவில் கொழுப்பு கூடிய உணவு வகைகளை இயன்றளவு குறைத்து மரக்கறி, பழங்கள் கூடுதலாக சாப்பிடுங்கள்.

- இரும்புச் சத்து நிறைந்த கீரை வகைகளை தினமும் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

- மலச்சிக்கலைத் தவிர்க்க இலைக்கறிகள், பப்பாசிப்பழம், கதலி, இதரை வாழைப்பழம், விளாம்பழம் போன்றவற்றைச் சாப்பிட்டு போதியளவு நீரும் அருந்துங்கள்.

- வளர்ந்தோர்கள் உங்கள் உயரத்திற்குரிய நிறையைப் பேணுங்கள். மேலதிக எடையினால் உயர் குருதி அழுத்தம், இருதய நோய்கள் ஏற்படலாம். உங்களது சரியான நிறையைக் கணிப்பிட வைத்திய ஆலோசனையை நாடுங்கள்.

- தினமும் போதியளவு உடற்பயிற்சி மிக அவசியம். (நடத்தல், மெதுவாக ஓடுதல், சைக்கிள் ஓடுதல், நீந்துதல் போன்றவை யோகாசனம் மிகச் சிறப்பானது)

- பற்களை தினமும் காலையிலும் படுக்கைக்கு போகுமுன்பும் நன்றாகத் துலக்கி பற்சுகாதாரம் பேணுங்கள். ஒவ்வொரு உணவின் பின்பும் வாயை நன்றாக அலம்புங்கள்.

- இனிப்புப் பண்டங்களை இயன்றளவிற்கு முக்கிய உணவுகளின் பின்பு உட்கொள்ளுதல் நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் உணவில் உப்பு, காரம், எண்ணெய் போன்றவற்றை இயன்றளவு குறையுங்கள்.

- செயற்கையான பானங்களை (சோடா) இயன்றளவு குறைத்து இயற்கையான பானங்களை (இளநீர், பழரசம்) கூடுதலாக அருந்துங்கள்.

- வாய்ப்புற்று நோயை ஏற்படுத்தும் புகையிலை போடும் பழக்கத்தை கைவிடுங்கள்.

- புகைப்பிடிக்கும் பழக்கத்தால் நுரையீரல் புற்றுநோய், இருதய நோய்கள் ஏற்படலாம். எனவே புகைப்பிடிப்பதை அடியோடு மறந்து விடுங்கள்.

- குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு கல்வி மட்டுமல்ல போதியளவு உடற்பயிற்சியும் ஓய்வும் அவசியம்.

- எமது வாழ்விற்கு வழிகாட்டிய முதியோரை கௌரவித்தல் அவர்களது உள ஆரோக்கியத்தை வளப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு

1932
.
06
.
03



உதிர்வு

2016
.
12
.
18

## அமரர் தெய்வானைப்பிள்ளை ஆறுமுகம்

(இல 278, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.)

**அன்பும் அனைவரையும் அரவணைக்கும்**
**பண்பும் கொண்ட**
**நற் புனிதரே உங்கள்**
**பிரிவுச் செய்தி கேட்டு**
**துவண்டு நிற்கின்றோம்.**

இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார்
உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக் கொள்வதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

சதீஸ் நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் சமர்ப்பணம்



மலர்வு

1932 . 06 . 03

உதிர்வு

2016 . 12 . 18

அமரர் **தெய்வானைப்பிள்ளை ஆறுமுகம்**

(இல 278, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.)

**ஞானத்தின் ஒளி விளக்காம்**
**நனி சிறக்க வாழ்ந்தவரே**
**நாடி வந்தோர்க்கு நன்மைகள் பல புரிந்தீர்**
**நற் செல்வங்களைப் பெற்று**
**நன்றாக வாழ வைத்தீர்**
**நாடறிய உமது புகழ்**
**நாளெல்லாம் நிலைத்து நிற்கும்**

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன்அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!**

ஸ்கந்தபுரம் மேற்கு,
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அமரர்
## தெய்வானைப்பிள்ளை ஆறுமுகம்

(இல 278, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.)

தோற்றம்
1932 . 06 . 03



மறைவு
2016 . 12 . 18

அன்பு கொண்ட உங்கள் உயிர் எம்மை
விட்டுப் போனதுவாஆலமரம்
சாய்ந்ததினால்விழுதுகள் இங்கு
வாடுகின்றதே இனிய உங்கள்
அன்புக் குரல் நிதமும் காதில்
ஒலிக்கிறதே தனித்து எமை வாழ
விட்டு இன்று நீ போனதுவும்
நியாயமா? அம்மாஉறவுகள்
எத்தனை இருந்தென்ன உலகிலே
ஒரு போதும் தேறிடாது எம் மனம்
தேடினாலும் காண்போமா உங்களி
இனிய முகத்தினை.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

உதயகுமார் குலேந்தினி
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

077 173358 59

# நன்றி நவிலல்......




அன்பைப் பண்பை ஊட்டி எம்மையெல்லாம் நெறிப்படுத்தி வாழ வைத்த எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் பிரகாசித்த அன்புத் தெய்வம் ஆறுமுகம் தெய்வானைப்பிள்ளை அவர்களின் மரணச் செய்தி கேட்டு உடன் வருகை தந்து அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறி வேண்டிய உதவிகள் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்களுக்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டு அஞ்சலி செலுத்தியவர்கட்கும் இறுதிச் சடங்கிலும், இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டோர்க்கும் மற்றும் ஒலி, ஒளி, பந்தல் கொட்டகை சேவையை வழங்கியோர்க்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் வேண்டிய உதவிகள் அனைத்தையுமே நல்கிய அனைவருக்கும் அந்தியேட்டி சபிண்டிகரண நிகழ்விலும் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காய் பிரார்த்தித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இம்மலரை அழகான முறையில் முழுமைப்படுத்தி உதவிய அச்சகத்தினருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

இல: 278, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.



இங்ஙனம்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org